உதவிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) அலுவலகம், தேன்கனிக்கோட்டை
20 NOV 2020

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நெடுஞ்சாலைத்துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற திரு.ஜே.வேலாயுதம் என்பவரின் மகள் திருமதி.வே.வடிவு, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016–இன் பிரிவு 15 (ம) 28(2)–ஐத் தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 33

| | |
|---|---|
| ADE | |
| SUP | |
| | |
| | |

நாள் 14.10.2020.
சார்வரி, புரட்டாசி 28,
திருவள்ளுவராண்டு 2051.

படிக்கவும்:–

1. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25 கடித எண்.50513/நிர்.1(2)/2002, நாள் 20.06.2019 மற்றும் 19.05.2020.

2. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.

-----------

ஆணை:–

நெடுஞ்சாலைத்துறையில் தேன்கனிக்கோட்டை (நெ) கிராமச் சாலைகள் பிரிவு அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ஜே.வேலாயுதம் என்பவர் 30.12.1999 அன்று காலமானார். அவரது பணி அலுவலக உதவியாளர் பதவியில் 09.12.1977 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மனைவி திருமதி.வே.கலைச்செல்வி என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரின் மகள் திருமதி.வே.வடிவு என்பவர் நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 17.12.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இயற்கை எய்திய நாளில், தனியரின் வயது 19 வருடம் 4 மாதம் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி

Scanned with CamScanner

புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு சமர்ப்பித்து மேற்குறிப்பிட்ட விவரங்களின் ,அடிப்படையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்யுமாறு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் கோரியுள்ளார்.

2. தனியருக்குப் பணி நியமனத்திற்கு முன்பு திருமணமாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்துறை, நாள் 23.01.2020-இன்படி இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15-இல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.வே.வடிவு என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 17.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி சட்டத்தின் பிரிவு 15 (திருமணமாகியுள்ள பெண் என்பதால்) மற்றும் பிரிவு 28(2) (பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக) ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்த்தி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதும் இருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.9660/க்யூ2/2020-1, நாள் 26.08.2020-இல் மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண்.25513/ஜி2/2020-1, நாள் 09.10.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திருமதி.வே.வடிவு, இளநிலை உதவியாளர் (நெ),
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.

Scanned with CamScanner

நகல்:–

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.

அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9,

தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.

பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

(C.No.5458/HM1/2019)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 15-10-2020

பே.கு.எண்: 1400/2020/அ.1/நாள்: 9.11.2020

— அனுப்பப்படுகிறது —

9/11/2020

**கோட்டப்பொறியாளர்**
நெடுஞ்சாலை (கமப) கிருஷ்ணகிரி

9/11/2020. 9-11-2020

பெறுநர்

திருமதி. வே. வடிவு,
இளநிலை உதவியாளர்,
(நெ) கமப, தேன்கனிக்கோட்டை -
உட்கோட்டம்;
[உதவிக்கோட்டப் பொறியாளர் (நெ) கமப
தேன்கனிக் கோட்டை மூலமாக]

பே.கு.எண்.100/2020/ இ நிஉ நாள் 23.11.2020
அனுப்பப்படுகிறது.

பெறுநர்

திருமதி. வே.வடிவு
இளநிலை உதவியாளர்
உதவிக்கோட்டப் பொறியாளர் (நெ) கமப
தேன்கனிக் கோட்டை

23/11/20

உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ)
(க ம ப).தேன்கனிக்கோட்டை

23.11.20

Scanned with CamScanner